**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No.129 /2023 P.W. 1 /LW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சுபாஷ் செல்வன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ.ராஜமணி | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 11.05.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**1)** நான் தற்போது மேற்காணும் முகவரியில் வசித்து வருகிறேன். மரவேலைச் செய்துவருகிறேன். 18.01.2022ம் தேதி இரவு விளக்கு பூஜை முடித்துவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டோம். மறுநாள் காலை 07.15 மணியிலிருந்து 08.00 மணிக்குள் கோவிலை திறந்து பார்க்கும்போது இசக்கியம்மன் சிலையில் இருந்த 1 பவுன் மதிக்கதக்க இரண்டு தங்கசெயின்கள் காணாமல் போயிருந்தது. இது குறித்து குளச்சல் காவல்நிலையத்தில் புகார் மனுக் கொடுத்தேன். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் நீதிமன்றத்தில் மன்றத்தில் அம்மன் செயின் ஒப்படைக்கப்பட்டதாக போலீசார் சொன்னதின்அடிப்படையில் **மேற்படி தடயப்பொருளை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து நான் பெற்றுவிட்டேன். அது அ.சா.பொ. 1 ஆகும். பஞ்சநாமா அ.சா.பொ.2 ஆகும்.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை - குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள்ஆஜர். சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.**

நான் சொன்ன கோயில் எங்கள் குடும்பத்திற்கான கோயில் என்றால் சரிதான். நான் வழக்கிற்காக உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல்துறைக்கு நெருக்கமானவர் என்றும் அவர்களுக்கு உதவி செய்பவன் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்